செ.வெ.எண்.21 நாள்: 07.09.2017

**திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில் புதிய இரண்டு பட்ட மேற்படிப்பு (ME) பாடப்பிரிவுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.**

திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில் இரண்டு பட்ட மேற்படிப்பு ME (ECE) & ME (Civil) பாடப்பிரிவு துவக்க விழா 06.09.2017 அன்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி பட்ட மேற்படிப்புகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது:-

திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில் இதற்கு முன்பாக மூன்று ME-Computer Science & Engineer – CSE, ME- Power Electronics & drives – EEE, ME-Engineering design – Mechanical – பாடப்பிரிவுகள் நடைபெற்று வருகின்றது. தற்போது மேலும் இரண்டு ME - Communication System (ECE) & ME –Structural Engineering (Civil) கூடுதல் பாடப்பிரிவுகள் தொடங்கப்படவுள்ளது. இவர்களுக்கு Choice Based credit system உள்ளது. இந்த நடைமுறை இப்பொழுதுதான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மாணவர் தரம் உயரும் இந்த 5 பாடப்பிரிவு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் மாதம் ரூ.6000/- ஊக்கத்தொகை தமிழக அரசால் வழங்கப்பட உள்ளது. திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில் சிறப்பு வகுப்புகளாக IES Coaching, Gate Coaching பல்வேறு சிறப்பு வகுப்புகள் போன்ற அனைத்து அரசுத்துறை தேர்வுகளுக்கும் தேர்வு எழுதுவதற்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

கல்லூரி மாணவ, மாணவிகள் அனைவரும் இன்று தொடங்கும் முதல் வகுப்பில் தாங்கள் எந்தத் துறை மற்றும் எந்த நிலையில் பயணிக்க வேண்டும் என்பதை முதலிலேயே தீர்மானித்து அதற்கான நடைமுறையை உடனடியாக செயல்படுத்திட வேண்டும். மேலும், பொதுஅறிவு, தினசரி செய்தித்தாள்கள், புத்தகங்கள் படிக்கும் பழக்கங்களை ஏற்படுத்த வேண்டும். நீங்கள் சிறப்பாக கல்வி பயின்று வீட்டிற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர்.இந்திரா கெட்ஸி டேவிட், பேராசிரியர்கள் திரு.சித்தார்த்தன், திருமதி.கஸ்தூரி, திருமதி.சுமங்களா, திருமதி.பால்கனி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் உள்ளனர்.

**வெளியீடு** : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி